Q.C. 056

DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

Name of the Test

Departmental Test for Subordinate Officers in the Tamil Nadu Treasuries and Accounts Department (Without Books)	164

Maximum Time: One and Half Hour Maximum Marks: 60

IMPORTANT INSTRUCTIONS

OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

Read the following instructions carefully before beginning to answer the questions.

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 60 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 60 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

a) One question will be displayed on the screen at a time.
   ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. The authority having powers under TR 27 to authorise payments without complying with the provisions of the Treasury Rules.
கருவூல விதி 27-ன் படி, கருவூல விதிகளை பின்பற்றாமல் பணம் வழங்க ஒப்பளிக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்

(A) Accountant General
மாநிலக் கணக்காயர்

(B) District Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Director of Treasuries and Accounts
கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர்

(D) Treasury Officer
கருவூல அலுவலர்

2. Loans raised by Government Temporary or permanent are shown in Government Accounts under
அரசால் பெறப்படும் தற்காலிக, நிரந்தரக் கடன்கள், அரசாங்கக் கணக்குகளில் சாட்டப்படும் கணக்குத் தலைப்பு

(A) Consolidated fund
தொகுப்பு நிதி

(B) Contingency fund
எதிர்பாரா செலவு நிதி

(C) Public accounts
பொதுக் கணக்கு

(D) Loan account
கடன் கணக்கு

3. If a pension payable in India remains undrawn for this period the pension shall cease to be payable
வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம் பெறப்படாமல் இருப்பின் காலாவதியாகும் கால அளவு

(A) 6 months
ஆறு மாதங்கள்

(B) 3 months
மூன்று மாதங்கள்

(C) 1 year
ஒரு வருடம்

(D) 3 years
மூன்று வருடங்கள்

4. The person responsible for the income tax deduction from pension.
ஓய்வூதியத்தில் இருந்து வருமான வரிப் பிடித்தம் மேற்கொள்ள பொறுப்பு உள்ள அலுவலர்

(A) Pensioner
ஓய்வூதியர்

(B) Income Tax Officer
வருமான வரி அலுவலர்

(C) Pension Disbursing Officer
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்

(D) The Bank
வங்கி

5. A register in Form No. 26, to keep a record of padlocks and keys belonging to the treasuries are maintained at _____.
கருவூலங்களின் பூட்டுகள் மற்றும் சாவிகள் குறித்து படிவம் எண் 26ன் படி பதிவு செய்யப்படும் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய அலுவலகம்.

(A) Sub Treasury
சார்நிலைக் கருவூலம்

(B) District Treasury
மாவட்டக் கருவூலம்

(C) Director of Treasuries and Accounts
கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குனர்

(D) Accountant General
மாநிலக் கணக்காயர்

6. This contains the rates of pay and allowances drawn by self drawing officers and issued by accountant general/pay and accounts officer.
இதில் சம்பளம் மற்றும் இதர படிகள், (தானே பணம் பெறும் அலுவலருக்கானது) குறித்து பதிவுகள் இருக்கும். இது மாநிலக் கணக்காயரால்/சம்பளம் மற்றும் கணக்கு அலுவலரால் வழங்கப்படும்.

(A) Transfer slip
மாற்றுச் சீட்டு

(B) Pay slip
சம்பளச் சீட்டு

(C) Last pay certificate
முன் ஊதியச் சான்று

(D) Life certificate
வாழ்வுச் சான்றிதழ்

7. Gratuity payment orders will lapse after the expiry of
பணிக் கொடை ஆணை காலாவதியாகும் கால அளவு

(A) 6 months
ஆறு மாதங்கள்

(B) 3 months
மூன்று மாதங்கள்

(C) one year
ஒரு வருடம்

(D) 3 years
மூன்று வருடங்கள்

8. Motor car advance shall be paid to a self drawing officer on the authority of
தானே பணம் பெறும் அலுவலருக்கான மோட்டார் வாகன முன்பணம் ஒப்பளிக்கும் அதிகாரம் படைத்த அலுவலகம்

(A) Accountant General
மாநிலக் கணக்காயர்

(B) Head of the Department
தலைமை அலுவலர்

(C) Self drawing officer
தானே பணம் பெறும் அலுவலர்

(D) Government
அரசு

9. The authority to order a Sub Treasury officer to keep open the sub treasury on a holiday for accepting ballot papers of bye-election.
இடைக்கால தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள் ஏற்பதற்காக சார் கருவூலத்தினை விடுமுறை நாளில் திறந்து வைக்க ஆணை வழங்க அதிகாரம் பெற்ற அலுவலர்

(A) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

(B) Treasury Officer
கருவூல அலுவலர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

10. Personal Deposits shall not be opened at the treasury unless sanctioned by
கருவூலத்தில் தன்வைப்புக் கணக்குகள் துவங்க ஒப்பளிப்பு வழங்கும் அலுவலகம்

(A) Accountant General
மாநிலக் கணக்காயர்

(B) Government
அரசு

(C) Treasury Officer
மாவட்ட கருவூல அலுவலர்

(D) Reserve Bank of India
ரிசர்வ் வங்கி

11. This is prepared by the District Treasury in Form No. T.A. 46 for the transactions on account of each class of deposits and attached to monthly accounts.
மாவட்டக் கருவூலத்தில் அனைத்து வைப்புத்தொகை கணக்குகளின் நடவடிக்கைகள் குறித்த கணக்குகள் படிவம் எண் 46-ல் தயாரிக்கப்படுகிறது. இதன் பெயர் _____

(A) Alteration memorandum
மாற்றுக் குறிப்பாணை

(B) Certificate of Acceptance
ஏற்பணிப்புச் சான்று

(C) Transfer slip
மாற்றுச் சீட்டு

(D) Plus minus memoranda
கூட்டல் கழித்தல் குறிப்பாணை

12. Every office should enter particulars of all its bills that are presented at treasury in a book called
ஒவ்வொரு அலுவலகமும் கருவூலத்தில் தாங்கள் சமர்ப்பித்த அனைத்துப் பட்டியல்களையும் இந்த புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

(A) TNTC 100
த நா க வி 100

(B) TNTC 70
த நா க வி 70

(C) TNTC 49
த நா க வி 49

(D) TNTC 69
த நா க வி 69

13. The net difference between the total receipts and total payments as shown in the banks daily statements should be posted in the Register of
கருவூல வங்கியின் தினசரி வரவு மற்றும் செலவுகளின் இறுதி வித்தியாசம் கருவூலத்தின் இந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) Bank Reconciliation
வங்கி சரிக்கட்டும் பட்டியல்

(B) Reserve Bank Deposits
ரிசர்வ் வங்கி வைப்புக் கணக்கு

(C) Bank Deposit
வங்கி வைப்புக் கணக்கு

(D) Revenue Deposit
வருவாய் வைப்புத் தொகை

14. No place shall be used as a strong room of a treasury unless this authority has certified that it is secured and fit to use as a strong room.
கருவூலக் காப்பறையின் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மை குறித்த சான்றினை இந்த அலுவலரிடம் பெற்ற பின்னரே கருவூலத்தின் காப்பறை ஒரு இடத்தில் இயங்க இயலும்.

(A) Executive Engineer of PWD
செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை

(B) Accountant General
மாநிலக் கணக்காயர்

(C) Regional Joint Director
மண்டல இணை இயக்குநர்

(D) Director of Treasuries and Accounts
கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர்

15. No Government servant shall be given his increment unless the sanctioning authority signs a certificate
அரசாங்கப் பணியாளரின் வருடாந்திர ஊதிய உயர்வு இப்படிவத்தில் தயாரிக்கப்பட்டு ஒப்பளிக்கும் அதிகாரியால் கையொப்பம் இடப்பட வேண்டும்

(A) In TNTC 69
படிவம் 69

(B) In TNTC 49
படிவம் 49

(C) In TNTC 100
படிவம் 100

(D) In TNTC 100 A
படிவம் 100 A

16. Where a Head Quarters of a Government Servant under suspension is changed on his request, he shall be eligible for the H.R.A. at the rates?
பணி இடைநீக்கம் செய்யப்பட்ட அரசுப் பணியாளர் தனது தலைமையிடத்தினை மாற்ற விருப்பம் தெரிவிப்பின் அவரது வீட்டு வாடகைப்படி வழங்க வேண்டிய விகிதம்

(A) admissible at the earlier Headquarters
முந்தைய தலைமை இடம்

(B) admissible at new Headquarters
புதிய தலைமை இடம்

(C) (A) or (B) whichever is less
(A) அல்லது (B) இவற்றில் குறைவானது

(D) (A) or (B) whichever is higher
(A) அல்லது (B) இவற்றில் அதிகமானது

17. An endorsement on contingent bill shall lapse after _____ after the date of endorsement or at the end of the financial year.
எதிர்பாராச் செலவினத்திற்கான பட்டியலில் உள்ள மேற்குறிப்பு கீழ்க்காணும் காலத்திற்குள் அல்லது நிதியாண்டு இறுதிக்குள் காலாவதி ஆகும்.

(A) 6 months
ஆறு மாதங்கள்

(B) one year
ஒரு வருடம்

(C) 1 month
ஒரு மாதம்

(D) 3 months
மூன்று மாதங்கள்

18. No cash chest or packet containing valuables or duplicate key should be received at a treasury for safe custody unless it is _____.
கருவூலக் காப்பறையில் பாதுகாப்பிற்காக பெறப்படும் பணப்பெட்டி, மாற்றுச் சாவி மற்றும் மதிப்புமிக்க பொருட்கள் இவ்வாறு இருந்தால் மட்டுமே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(A) Properly packed
நன்கு மூடப்பட்டது (Pack)

(B) Properly sealed
முறையாக முத்திரையிடப்பட்டது

(C) Open to see
தெளிவாக தெரிதல்

(D) Received in good condition
நல்ல நிலையில் பெறப்பட்டது

19. Lapsed deposit shall be refunded upto
காலாவதியான வைப்புத் தொகை திரும்ப வழங்கும் கால அளவு

(A) 1 year
1 வருடம்

(B) 3 months
3 மாதங்கள்

(C) 1 month
1 மாதம்

(D) 3 years
3 வருடங்கள்

20. Additional charge allowance shall be drawn upto
கூடுதல் பொறுப்புப்படி வழங்க வேண்டிய கால அளவு

(A) 1 year
ஒரு வருடம்

(B) 3 months
மூன்று மாதங்கள்

(C) To the date of additional charge held
கூடுதல் பொறுப்பு வகித்த நாள் வரை

(D) 5 months
ஐந்து மாதங்கள்

21. Maximum limit of withdrawal from the general provident fund under rule 15 B of GPF (TN) Rules.
பொது சேம நல நிதி விதிகளின் படி, விதி எண் 15 B-ன் கீழ் அதிகபட்சமாக பெறக்கூடிய தொகை

(A) 6 lakhs
6 இலட்சம்

(B) 3 lakhs
3 இலட்சம்

(C) 5 lakhs
5 இலட்சம்

(D) 10 lakhs
10 இலட்சம்

22. The maximum normal cash balance that can be kept in a sub treasury.
சார்நிலைக் கருவூலங்களில் வைத்துக்கொள்ளக் கூடிய அதிகப்பட்ச ரொக்கக் கையிருப்பு

(A) Rs. 100/-
ரூ. 100/-

(B) Rs. 1,000/-
ரூ. 1,000/-

(C) Rs. 500/-
ரூ. 500/-

(D) Rs. 2,000/-
ரூ. 2,000/-

23. When a permanent advance is sanctioned, it shall be drawn from a treasury on a voucher is _____ supported by a copy of the order sanctioning advance.
கருவூலத்திலிருந்து நிலையான முன்பணம் பெற பற்றுச்சீட்டு இப்படிவத்தில் ஒப்பளிப்பு ஆணையுடன் அனுப்பப்பட வேண்டும்.

(A) Form No. 49
படிவம் 49

(B) Form No. 100
படிவம் 100

(C) Form No. 22
படிவம் 22

(D) Form No. 40
படிவம் 40

24. The register to be opened and maintained by each treasury for the purpose of recording the temporary advances.
தற்காலிக முன்பணத்தைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக ஒவ்வொரு கருவூலத்தாலும் திறக்கப்பட்டுப் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடு

(A) Form No. 40
படிவம் 40

(B) Form No. 57
படிவம் 57

(C) Form No. 57 A
படிவம் 57 A

(D) Form No. 99
படிவம் 99

25. The treasury bill book is maintained in _____.
கருவூல பட்டியல் புத்தகம் _____ல் பராமரிக்கப்படுகிறது.

(A) Form 60
படிவம் 60

(B) Form 65
படிவம் 65

(C) Form 70
படிவம் 70

(D) Form 75
படிவம் 75

26. The bill form for preparing the Inter Departmental Adjustment between the service departments is
துறை இடை சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ள தயாரிக்கப்பட வேண்டிய பட்டியல் படிவம்

(A) TNTC 57 A
படிவம் 57 A

(B) TNTC 58 A
படிவம் 58 A

(C) TNTC 49
படிவம் 49

(D) TNTC 58 B
படிவம் 58 B

27. Date of increment to a government servant appointed to a post on 31.03.2017 forenoon will be
31.03.2017 அன்று முற்பகல் பணியில் சேர்ந்த அரசுப் பணியாளரின் வருடாந்திர ஊதிய உயர்வு நாள்

(A) 1.3.2017

(B) 1.1.2018

(C) 1.4.2017

(D) 31.3.2018

28. The period upto which departmental cheques are valid is
துறைக் காசோலைகள் காலாவதியாகும் கால அளவு

(A) 3 months
மூன்று மாதங்கள்

(B) 6 months
ஆறு மாதங்கள்

(C) 4 months
நான்கு மாதங்கள்

(D) 1 month
ஒரு மாதம்

29. The passed bills shall be forwarded after making necessary entries in _____ for preparation of cheques/issue of debit advice.
ஒப்பளிப்பு செய்யப்பட்ட பட்டியல்கள் குறித்து இப்பதிபேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே காசோலை அல்லது பற்றுச்சீட்டு தயாரிக்கப்பட வேண்டும்

(A) Form 70
படிவம் 70

(B) Form 100
படிவம் 100

(C) Form 70 A
படிவம் 70 A

(D) Form 70 D
படிவம் 70 D

30. The party requesting for a fresh cheque in lieu of a lost one, should execute an indemnity bond in
தொலைந்து போன காசோலைக்கு மாற்றாக புதிய காசோலை வேண்டும் நபர், பிணைமுறிப்பத்திரம் வழங்க வேண்டிய படிவம்

(A) Form No 46
படிவம் 46

(B) Form No 46 A
படிவம் 46 A

(C) Form 49 A
படிவம் 49 A

(D) Form 69
படிவம் 69

31. Pay and accounts offices at _____ exercise pre audit functions of Accountant General.
மாநிலக் கணக்காயரின் முன்தணிக்கை இந்த சம்பளக் கணக்கு அலுவலகங்களில் செய்யப்படுகிறது

(A) Chennai only
சென்னை மட்டும்

(B) Chennai and Madurai
சென்னை மற்றும் மதுரை

(C) Chennai and Coimbatore
சென்னை மற்றும் கோயம்புத்தூர்

(D) Chennai and all Districts
சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்கள்

32. Provisional pension is sanctioned by
தற்காலிக ஓய்வூதியம் ஒப்பளிக்கும் அலுவலர்

(A) Accountant General
மாநிலக் கணக்காயர்

(B) Head of office last served
கடைசியாக பணிபுரிந்த அலுவலகத் தலைமை

(C) Head of department
துறைத் தலைவர்

(D) Government
அரசு

33. The monetary limit in each case of extending relief on account of natural calamities by the district collector.
இயற்கைப் பேரிடர்களுக்கான இழப்புத் தொகை மாவட்ட ஆட்சியரால் அதிகபட்சம் ரூ. _____ வழங்க இயலும்.

(A) 5 lacs
5 இலட்சம்

(B) 10 lacs
10 இலட்சம்

(C) 20 lacs
20 இலட்சம்

(D) 25 lacs
25 இலட்சம்

34. The rate of DGRG payable is for every _____ completed months 1/4 of the monthly emoluments.
இறப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு _____ மாதங்களுக்கும் 1/4 மாத பணப் பயன்கள் வழங்கப்படும்

(A) 3

(B) 1

(C) 9

(D) 6

35. Soft copies of the statement in _____ shall be obtained at the time of presentation of pay bills from each drawing and disbursing officer.
பணம் பெறும் அலுவலர்களால் சம்பளப்பட்டியல் சமர்ப்பிக்கப்படும் போது பெறப்பட வேண்டிய மென்பொருள் நகலினை இப்படிவத்தில் பெற வேண்டும்.

(A) Annexure I
இணைப்பு I

(B) Annexure IV
இணைப்பு IV

(C) Annexure III
இணைப்பு III

(D) Annexure II
இணைப்பு II

36. Sanction order for loans will lapse if it is not acted upon
கடன் ஒப்பளிப்பு ஆணைகள் காலாவதி ஆகும் கால அளவு

(A) for one year
ஒரு வருடத்திற்கு

(B) on or before 31st March
மார்ச் 31-க்குள்

(C) for six months
ஆறு மாதங்களுக்கு

(D) on or before 31st December
டிசம்பர் 31-க்குள்

37. Bills for charges on account of petty works and repairs allotted to department other than PWD shall be drawn in
பொதுப்பணித்துறை அல்லாத துறைகளில் சில்லறை வேலைகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான பட்டியல் தயாரிக்கும் படிவம்

(A) Form No 58
படிவம் 58

(B) Form 59
படிவம் 59

(C) Form No 58 A
படிவம் 58 A

(D) Form 49
படிவம் 49

38. The period for which sanction order under general provident fund will be valid for
பொது சேமநல நிதி ஒப்பளிப்பு ஆணை காலாவதி ஆகும் கால அளவு

(A) 3 months
மூன்று மாதங்கள்

(B) 6 months
ஆறு மாதங்கள்

(C) 9 months
ஒன்பது மாதங்கள்

(D) 1 year
ஒரு வருடம்

39. Life time arrears upto 1,50,000 shall be sanctioned by the authority
1,50,000/- வரையான வாழ்நாள் ஓய்வூதியம் ஒப்பளிக்கும் அலுவலர்

(A) Director of Treasuries and Accounts
கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர்

(B) Treasury Officer
கருவூல அலுவலர்

(C) Accountant General
மாநிலக் கணக்காயர்

(D) Sub treasury officer
சார் கருவூல அலுவலர்

40. When a refund has to be made on account of spoiled or damaged stamps, the officer drawing the bill is
கிழிந்த மற்றும் சிதைந்த முத்திரைத் தாட்களுக்கான தொகை திரும்ப வழங்க பட்டியல் தயாரிக்கும் அலுவலர்

(A) Assistant Treasury Officer
உதவி கருவூல அலுவலர்

(B) Tahsildar
தாசில்தார்

(C) Stamp vendor
முத்திரைத் தாள் விற்பனையாளர்

(D) The Claimant
பணம் கேட்பவர் (Claimant)

41. Plus minus memorandum shall be prepared in this form.
கூட்டல் கழித்தல் குறிப்பாணை தயாரிக்கப்பட வேண்டிய படிவம் எண்

(A) Form 49
படிவம் 49

(B) Form 46
படிவம் 46

(C) Form 69
படிவம் 69

(D) Form 44
படிவம் 44

42. The expansion of PAC is
பி.ஏ.சி (PAC) என்பதன் விரிவாக்கம்

(A) Pay and Accounts Committee
சம்பளம் மற்றும் கணக்கு குழு

(B) Public Accounts Committee
பொது கணக்கு குழு

(C) Pay and Accounts Commission
சம்பளம் மற்றும் கணக்கு குழுமம்

(D) Public Advance Committee
பொதுக் கடன் குழு

43. Safe custody articles shall be kept under
சேம பாதுகாப்புப் பொருட்கள் வைக்கப்பட வேண்டிய இடம்

(A) Single lock
ஒற்றைப் பூட்டு

(B) Cash chest
ரொக்கப் பெட்டி

(C) Double lock
இரட்டைப் பூட்டு

(D) Safety lock
பாதுகாப்புப் பெட்டி

44. When a treasury officer/pay and accounts officer is doubtful whether the claim should be paid or not, he should take the orders of
கேட்புப் பட்டியல் அனுமதிப்பதில் சந்தேகம் நேரும் போது ஒரு கருவூல அலுவலர் அல்லது சம்பளக் கணக்கு அலுவலர் இவரது ஆணைகளைப் பெற வேண்டும்

(A) Director of Treasuries and Accounts
கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர்

(B) Accountant General
மாநிலக் கணக்காயர்

(C) Government
அரசு

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

45. Commutation shall invariably become absolute on the date of
ஓய்வூதியம் தொகுத்துப் பெறும் தொகை இந்த தேதியிலிருந்து கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்

(A) date of retirement
ஓய்வு பெறும் நாள்

(B) payment of commutted value
ஓய்வூதியம் தொகுத்து பெற்ற நாள்

(C) date of authorisation
அதிகார ஆணை நாள்

(D) date of pension payment
ஓய்வூதியம் வழங்கப்பட்ட நாள்

46. Arrear pay shall be drawn in
சம்பள நிலுவைத் தொகைகள் இப்பட்டியலில் கோரப்பட வேண்டும்

(A) the ordinary pay bill
சாதாரண சம்பளப் பட்டியல்

(B) seperate bill
தனி பட்டியல்

(C) contingent bill
எதிர்பாராச் செலவினப் பட்டியல்

(D) advance bill
முன்பணப் பட்டியல்

47. The advance granted to Government servant to enable them to meet contingent changes relating to their offices before drawing bills for the amount
அரசு அலுவலகங்களில் எதிர்பாராச் செலவினங்களுக்கான பட்டியலிடப்படும் முன்னரே, செலவிடத் தேவையான தொகையை இதிலிருந்து பெறலாம்

(A) Temporary advance
தற்காலிக முன்பணம்

(B) Ways and means advance
வழிவகை முன்பணம்

(C) Contingent advance
எதிர்பாரா முன்பணம்

(D) Permanent advance
நிலையான முன்பணம்

48. Temporary advances are drawn for meeting the specific purposes of contingent expenses under _____ of Tamil Nadu Financial code
குறிப்பிட்ட எதிர்பாராச் செலவினங்களுக்கான பட்டியல் தமிழ்நாடு நிதித்தொகுப்பு _____ன் படி தயாரிக்கப்பட வேண்டும்.

(A) Article 57 A
விதிக்கூறு 57 A

(B) Rule 40
விதி எண் 40

(C) Article 57
விதிக்கூறு 57

(D) Article 99
விதிக்கூறு 99

49. Refund of excess recoveries of advances to government servants shall be made only after obtaining
அதிகப்படியான பிடித்தம் மேற்கொள்ளப்பட முன்பணத் தொகையினை மீளப்பெற இது அவசியம்

(A) AG authorisation
மாநிலக் கணக்காயரின் ஆணை

(B) Government order
அரசு ஆணை

(C) Proceedings of Head of Office
அலுவலகத் தலைமையின் செயல்முறைகள்

(D) Certificate from the Govt. Servant
அரசுப் பணியாளரின் சான்று

50. If an expenditure is 'New Service' item, the following is necessary for processing their claims
ஒரு செலவினம், 'புதிய பணி' தொடர்பானது எனில் அதை அனுமதிக்க இது மிகவும் முக்கியம்

(A) Express pay order
விரைவுக் கொடுப்பாணை

(B) Orders releasing contingency fund by finance department
எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து பெற நிதித்துறை ஆணை

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) (A) or (B)
(A) அல்லது (B)

51. Renewal of pension payment order may be done by
ஓய்வூதியக் கொடுப்பாணை புதுப்பிக்க (Renewal) அதிகாரமுள்ள அலுவலர்

(A) Treasury officer
கருவூல அலுவலர்

(B) Assistant treasury officer
உதவிக் கருவூல அலுவலர்

(C) Additional treasury officer
கூடுதல் கருவூல அலுவலர்

(D) Sub treasury officer
சார் நிலை கருவூல அலுவலர்

52. Number of local fund accounts maintained by each panchayat union commissioner
ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய ஆணையரும் பராமரிக்கக் கூடிய உள்ளாட்சி நிதி கணக்குகளின் எண்ணிக்கை

(A) Three
மூன்று

(B) Four
நான்கு

(C) Two
இரண்டு

(D) Five
ஐந்து

53. _____ may transfer the payment of a pension from one district to another in the state.
ஓய்வூதியம் வழங்குவதை மாநிலத்திற்குள் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு _____ மாற்றம் செய்யலாம்.

(A) Additional Treasury Officer
கூடுதல் கருவூல அதிகாரி

(B) Assistant Treasury Officer
உதவி கருவூல அதிகாரி

(C) Additional-Sub Treasury Officer
கூடுதல் சார்நிலை கருவூல அதிகாரி

(D) Treasury Officer
கருவூல அதிகாரி

54. Bill for withdrawing death cum retirement gratuity is prepared in _____.
இறப்பு மற்றும் ஓய்வூதிய பணிக்கொடையினை பெற _____ல் தயார் செய்ய வேண்டும்.

(A) Form 75B
படிவம் 75B

(B) Form 89
படிவம் 89

(C) Form 99
படிவம் 99

(D) Form 100
படிவம் 100

55. Payment order issued by the Treasury shall be valid for a period of _____.
கருவூலத்தால் வழங்கப்படும் பேமெண்ட் ஆர்டர் _____ காலம் செல்லுபடியாகும்.

(A) Not exceeding 5 days
5 நாட்களுக்கு மிகாமல்

(B) Not exceeding 7 days
7 நாட்களுக்கு மிகாமல்

(C) Not exceeding 10 days
10 நாட்களுக்கு மிகாமல்

(D) Not exceeding 15 days
15 நாட்களுக்கு மிகாமல்

56. _____ Register is maintained for watching adjustment of Temporary Advance.
_____ பதிவேட்டின் மூலம் தற்காலிக முன்பணம் சரிகட்டுதல் கண்காணிக்கப்படுகிறது.

(A) From 52 A
படிவம் 52 A

(B) Form 57 A
படிவம் 57 A

(C) Form 58 A
படிவம் 58 A

(D) Form 58 B
படிவம் 58 B

57. Register for Reserve Bank Deposit is maintained in _____.
ரிசர்வ் வங்கியின் வைப்புகளை _____ பதிவேட்டின் மூலம் பராமரிக்கப்படுகிறது.

(A) Form T.A. 6
படிவம் T.A. 6

(B) Form T.A. 7
படிவம் T.A. 7

(C) Form T.A. 8
படிவம் T.A. 8

(D) Form T.A. 10
படிவம் T.A. 10

58. The minimum family pension is _____.
குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் _____

(A) Rs. 3,850
ரூ. 3,850

(B) Rs. 4,850
ரூ. 4,850

(C) Rs. 7,850
ரூ. 7,850

(D) Rs. 8,850
ரூ. 8,850

59. Fifth pay commission arrear and impounded DA arrear can be withdrawn during _____ payment of GPF.
பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து ஐந்தாவது ஊதியக் குழு நிலுவை மற்றும் முடக்கப்பட்ட (இம்பவுன்டட்) அகவிலைப்படியினை _____ தொகையினை பெறும் போது திரும்பப் பெறலாம்.

(A) 50%

(B) 75%

(C) 85%

(D) 90%

60. If pension payment order is lost duplicate can be obtained from _____.
ஓய்வூதியம் பெறும் ஆணை (பென்ஷன் பேமெண்ட் ஆர்டர்) தொலைந்து விட்டால் நகல் ஆணையினை இவரிடமிருந்து பெறலாம்

(A) Accountant general
மாநில கணக்காயர்

(B) Director of treasuries and accounts
கருவூலம் மற்றும் கணக்கு இயக்குநர்

(C) Head of the department last served
கடைசியாக பணிபுரிந்த துறைத்தலைவரிடமிருந்து

(D) Treasury officer
கருவூல அலுவலர்

056/DM/26

Register Number									

DEPARTMENTAL EXAMINATIONS
DEPARTMENTAL TEST FOR SUBORDINATE OFFICERS IN THE TAMIL NADU TREASURIES AND ACCOUNTS DEPARTMENT

(With Books)

Maximum Time : 1 hour | Maximum Marks : 40

IMPORTANT INSTRUCTIONS

DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

Read the following instructions carefully before beginning to answer the questions.

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

Answer any EIGHT questions.

எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளி.

(8 × 5 = 40)

1. Give the articles which should be kept in the Treasury for safe custody.

   கருவூல காப்பறையில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டிய பொருள்கள் யாவை?

2. List down the responsibilities of a Drawing Officer for money withdrawn from the Treasury.

   கருவூலத்தில் பட்டியல் அளித்து பணம் பெறும் பணம் எடுக்கும் அலுவலருடைய பொறுப்புகள் குறித்து பட்டியல் இட்டு விளக்குக.

3. What are the different kinds of pensions and under what circumstances each of them may be sanctioned?

   பல்வகை ஓய்வூதியங்கள் எவை மற்றும் எந்த சூழலில் இந்த ஓய்வூதியங்கள் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது?

4. Explain in details of Commutation of a portion of pension.

   ஓய்வூதியம் தொகுத்து பணப்பயன் வழங்குவது தொடர்பாக விளக்குக.

5. Write a notes on Election Deposit in details.

   தேர்தல் வைப்புத் தொகை பற்றி விவரமாக விளக்குக.

6. Explain about :

   (a) Transfer Slip and Alteration Memorandum

   (b) Revenue Deposit and Personal Deposit.

   கீழ்கண்டவற்றை பற்றி விளக்கம் அளிக்கவும் :

   (அ) மாற்றுச் சீட்டு மற்றும் மாற்றுக் குறிப்பாணை

   (ஆ) ரெவின்யூ வைப்புத்தொகை மற்றும் அலுவல் பெயர் வைப்புத் தொகை

7. Describe the following :

   (a) Pay Slip and Last Pay Certificate.

   (b) Compulsory retirement and Voluntary Retirement.

   பின்வருவனவற்றை பற்றி விவரி :

   (அ) சம்பளச் சீட்டு மற்றும் முன் ஊதியச் சான்று

   (ஆ) கட்டாய ஓய்வு மற்றும் விருப்ப ஓய்வு

8. What are the monthly and annual records prepared in Treasury and submitted to the Accountant General?

கருவூலத்தில் தயாரிக்கப்பட்டு, மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்படும் மாத மற்றும் ஆண்டுக் கணக்குகள் (Records) யாவை?

9. What are the safeguards provided in the rules to avoid double claim of arrear bills by drawing officers?

பணம் பெறும் அலுவலர்கள் அனுப்பும் நிலுவைப் பட்டியல்களில் இரட்டிப்பு கோருதலை (Double Claim) தவிர்க்க விதிகளில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்கள் யாவை?

10. What are the procedure to be followed while opening and closing of the strong room of District Treasury?

கருவூலப் பாதுகாப்பு அறைத் திறப்பு மற்றும் மூடுதல் குறித்து கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் யாவை?